RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
DOI: 10.34256/irjt224s1948

# அறவியல் பார்வையில் இஸ்லாமியத் தமிழிலக்கியமும் பல்சமய ஒற்றுமைக் கூறுகளும்

கா. மைதீன் [அ, *]

[அ] இஸ்லாம் மற்றும் இஸ்லாமியத் தமிழியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா

# Islamic Tamil Literature and the Elements of Multi-Religious Unity from a Moral Point of View

**K. Maideen** [a, *]

[a] Department of Islam and Islamic Tamil Studies, Madurai Kamarajar University, Madurai–625021, Tamil Nadu, India

* Corresponding Author: kmaideenmku@gmail.com

Received: 01-08-2022
Revised: 30-09-2022
Accepted: 12-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Judaism, Christianity, Jainism, Buddhism, Saivism, Vaishnavism, Sikhism, Islam, etc., are embraced by the majority of the people at times of origin in the world. In general, the purpose of religion is to moralize people. When the people in Arabia suffered from the worship of many Gods, The Prophet Muhammad created the noble idea of 'God is one' and upheld that principle and established the principles of commonality that the people of the world should follow. That's why 'Praise Muhammad who appeared in the Arab country and made the tradition of one Lord alive and praise the mercy given by the common brotherhood and flawless religion', said the Tamil Poet Thiru. V. Kalyana Sundaranar praising the Prophet. Such Islam began to spread in Tamil Nadu during the Middle Ages. Islamic scholars have written a wide variety of literary works in Tamil which are full of religious facts. Some have also written stories. This story has been written keeping in mind the nature of Tamil Nadu. Islamic narratives form the theme of the story without differing from the religious concepts at all. It is also written in a simple way for the common people to understand. The Author of Islamic Tamil does not fail to present the religious views in the right way without any variation.

**Keywords:** Thirukkurran (Quran) Thirumanimalai, Pudukushsham, Meinjnana Sathagam, Seerapuranam, Devaram, Jain, Buddhist, Christian, Islamic Literature. etc

## முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றில் சமயங்கள் பேரிடம் வகிக்கின்றன. சமயம் சார்ந்து தமிழில் எண்ணற்ற நூல்களும் பல்வேறு இலக்கிய வடிவங்களும் தோன்றியுள்ளன. சைவம், வைணவம் சார்ந்த இலக்கியங்களும், இந்திய மண்ணில் தோன்றிய சமணமும் பௌத்தமும் தமிழுக்கு தன்னிகரற்ற இலக்கியப் பொலிவைத் தந்துள்ளது. பிற நாட்டிலிருந்து தமிழ் மண்ணுக்கு வந்த இஸ்லாமும், கிறித்துவமும் தமிழிலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தொண்டாற்றியுள்ளன. கிறித்துவ சமயத்தைப் பரப்ப வந்த பாதிரிமார்கள் தமிழ் கற்றுத் தமிழில் பல அரிய நூல்களைத் தந்ததோடு, உரைநடை வளர்ச்சி, அகராதிக்கலை ஆகியவற்றுக்கும் அவர்கள் வித்திட்டனர். அவர்களுக்கு முன்னரே தமிழ்நாட்டில் வாழ்ந்த தமிழ் இஸ்லாமியர்கள் தமிழிலுள்ள எல்லா வகை இலக்கியங்களிலும் நூற்றுக்கணக்காக நூல்கள் யாத்துள்ளனர். எனினும், அவை வெளியுலகத்திற்கு உரியவாறு அறிவிக்கப்படவில்லை. அண்மைக் காலமாகத்தான் இஸ்லாமியக் காப்பியங்களையும், பிற

இலக்கியங்களையும் மக்களிடையே முறையாக எடுத்துரைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதினாறாம் நூற்றாண்டு தொடங்கி இஸ்லாமிய இலக்கியங்கள் தமிழில் வளமும் வனப்பும் பெற்று சிறந்து விளங்குகின்றன. இஸ்லாம் சமய அறங்களையும், அதன் அடிப்படைத் தத்துவங்களையும் முறையாக எடுத்துரைக்கும் பணிகள் தமிழில் செவ்வனே செய்யப்பெற்றுள்ளன.

## மெய்ஞ்ஞானச் சதகம்

இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் முற்றிலுமே மார்க்க நெறிகளை எடுத்துரைப்பனவாக இருப்பதால் அவற்றில் பார்சிச் சொற்களும், இஸ்லாமிய மார்க்கக் கருத்துகளும் விரவி வருகின்றன. இஸ்லாமியர் அல்லாத தமிழரிடத்தில் இவ்விலக்கியங்கள் அதிகம் பயிலாமைக்கு இது ஒரு முக்கியக் காரணமாகும். 'தக்கடி ஷெய்கு பஸீர் லெப்பை கலிமா' அவர்கள் திருத்தூதர் நபிகள்மீது 'மெய்ஞ்ஞானச் சதகம்' பாடியுள்ளார். அதில் ஒரு பாடல்,

"ஆதிநபிக்கும் ஆதிமுதல்
ஆன முர்ஸ லீன்களுக்கும்
சோதிநபி மாரனை வருக்கும்
தோன்றலாகப் பிறந்தோரை
சாதிஹாஷிம் குலக்கொழுந்தைத்
தக்கோன் கஃபத்துல்லா வாழ்
ஹா திமுஹம்ம திரசூலைக்
காணும் திருநாள் எந்நாளோ?"

என்பதாகும். இப்பாடலினை அறபு மொழிப் பயிற்சியும் இஸ்லாமிய நெறியறிவும் இல்லாதோர் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. இஸ்லாமிய நெறியையும், அதன் அடிப்படைத் தத்துவங்களையும் முழுமையாகவும், தெளிவாகவும் எளிமையாகவும் விளக்குகின்ற முயற்சி உமறுப்புலவரின் 'சீறாப்புராணத்தில்' மேற்கொள்ளப்பட்டுள்ளது (Manavai Musthapa, 1987).

## சீறாப்புராணம்

தமிழ்க்காப்பிய மரபை அடியொற்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எளிதில் புரியும்படி உமறுப்புலவர் படைத்த சீறாப்புராணத்தில் இடம்பெற்றுள்ள ஒரு அற்புதக் கதையில், 'காட்டில் வேடன் ஒருவனின் வலையில் பெண்மான் ஒன்று அகப்பட்டது. நபிகள் அம்மானைக் கண்டு வருத்தமுற்றார். அம்மான் நபிகளிடம் 'யா றசூல்! இம்மலைச் சாரலில் என் ஆண்மானுடன் அண்மையில் ஈன்ற கன்றுகளுடன் இனிது வாழ்ந்தேன். ஒரு வேங்கையின் கர்ச்சனையைக் கேட்டு நாங்கள் அஞ்சித் தறிகெட்டுச் சிதறினோம்! நான் இவ்வேடன் வலையில் அகப்பட்டேன்! இவ்வேடனால் கொல்லப்படுவது குறித்து நான் வருந்தவில்லை. அவனுடைய பசிப்பிணியைத் தீர்க்கும் வகையில் மரணமடைவதில் புண்ணியமுண்டு. ஆனால், என் ஆண்மான் எங்கு ஓடித்திரிந்ததோ! நானின்றி அது புல்லும் நீரும் அருந்தாது. மேலும், நான் சென்று என் கன்றைக் கண்டு பாலூட்டி, என் கலையையும், கன்றையும் இனத்தோடு சேர்த்துவிட்டு திரும்பவந்து இவ்வேடனுக்கு இரையாவேன்' என்றது. இது கேட்ட முகம்மது மானை விடுவிக்குமாறு வேடனிடம் கூற, அவனோ கல்லும் முள்ளும் தைக்கக் கடும்பாடுபட்ட இதனையா விடுவேன்! சென்ற மான் திரும்பி வருவதும் உண்டா என்றான். பெருமானரோ இம்மான் வராவிட்டால் நான் உனக்கு இரண்டு மான் தருவேன். அதுவரை நான் இம்மானுக்குப் பிணையாக நிற்பேன் என்றார். மானை வேடன் அவிழ்த்து விட்டான். அது ஓடோடிச் சென்று தன் கலையைக் கண்டது. குட்டிக்கு வயிறாறப் பாலூட்டியபின் தான் வேடனிடம் செல்ல வேண்டியிருப்பதைக் கூறியது. தப்பிய நீ மீண்டும் போவதா கூடாது என இன மான்கள் தடுத்தன. எனக்காக ஒருவர் பிணை நிற்கிறார்.

அவரை ஏமாற்றின் கொடிய நரகம்தான் எனக்குக் கிட்டும், எனச் சொல்லியது. அப்பெண்மான் திரும்பியபோது அதன் கன்று தானும் உடன் வருவதே முறையென வந்தது. நபிகள் நாயகம், "இதோ பார்! ஒன்றுக்கு இரண்டு மான்கள் உன்னிடம் வருவதை என்றார். வேடன் திருந்தி ஈமான் கொண்டு இஸ்லாத்திற் சேர்ந்தான். இதனை உமறுப்புலவர்,

"தேனைக் குங்குமங்கள் சிந்திச் செழித்ததின் புயத்து வள்ளல்

காளைக்குவ் விடத்திற் காட்டும் கமல வென் பதத்தைப் போற்றித்

தானைக்கும் பதிக்கும் யானே தலைவனென் பவர் போல் வேடன்

மானைக்கொண் டுவரப்போய் ஈமானைக் கொண் டகத்திற் புக்கான்"

என்ற பாடலடிகளால் குறிப்பிடுகிறார் (Mahamathi Sathavathani, 2014). எனவேதான், தொட்ட இடமெல்லாம் இனிக்கும் சிறப்புப் பெற்றது சீறாப்புராணம் என்பர். சங்கமருவிய காலத்தில் தமிழ் மண்ணில் காலூன்றிய சமண பௌத்த சமயங்கள் ஊன் உண்ணுதல், உயிர்க்கொலை செய்தல் போன்றன அறமற்ற செயல் என வன்மையாகக் கண்டிக்கும் போக்கினைக் கடைபிடித்தது. இது ஒரு கொள்கையாகப் பேசப்படுவது ஒரு புறம் இருந்தாலும், பிறவுயிர்களின் பசிப்பிணியைத் தீர்க்கும் வகையில் நாம் மரணமடைவதில்கூட புண்ணியமுண்டு என்ற கூற்றை ஒரு மானின் கதையினின்று எடுத்துரைத்து, உயிர்க்கொலை செய்யமுயன்ற வேடனின் செயலையும் தடுத்தாட் கொண்டு உலக மானிடர்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படை அறத்தையும் நபிகள் பெருமகனாரின் அற்புதத்தையும் மிக அழகாக எடுத்துரைத்துள்ளார் உமறுப்புலவர். மேலும், ஒரு தீஞ்செயலை கைவிடும் போது அழகான இரண்டு நற்பலன்கள் உமக்குக் கிட்டும் என்பது போன்ற அறத்தையும் மனிதமனங்களில் விதைத்துள்ளார் உமறு.

"அறமே அறிவு அறிவே அறம் என கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானிகளான சாக்ரடீஸ், பிளேட்டோ போன்ற அறிஞர்கள் இவற்றை வரையறை செய்துள்ளனர். அதன்வழி மனிதனுக்குச் செயல்பாட்டு அறிவைத் தந்து அவனைச் செயலறப் பேணும் அறப்பேரறிஞனாக வாழத் துணையாக நிற்பது 'அறவியல்' என விளக்கம் கூறுவது மரபு".

## புதுக்குஷ்ஷாம் மற்றும் திருமணிமாலை

சேகனாப்புலவர் (செய்கப்துல் காதிர் நயினார்) என்பார், புதுக்குஷ்ஷாம், குதுபுநாயகம், திருமணிமாலை, திருக்காரணப் புராணம் எனும் பெரும் காப்பியங்களைப் படைத்துள்ளார். புதுக்குஷ்ஷாம் என்பது 'புதூஷ், ஷாம' என்னும் இரு சொற்களின் இணைப்பாகும். 'புதூஷ்' என்பதற்கு 'வெற்றி' என்பது பொருள். இன்றைய 'சிரியா' நாட்டின் பண்டைய பெயர் 'ஷாம்' என்பதாகும். ஆதலின் புதுக்குஷ்ஷாம் என்பதற்கு 'ஷாம்' நகர வெற்றி என்பது பொருளாகும். ஆக, ஷாம் நகர வெற்றி பற்றிய விரிவான செய்திகள் புதுக்குஷ்ஷாம் எனும் காவியத்தில் பேசப்படுகின்றன எனலாம். சேகனாப் புலவர் இயற்றிய திருமணிமாலை எனும் மற்றுமொரு காப்பியத்தில் 'இபுறாகீம் நபி' அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடியுள்ளார்.

"இபுறாகீம் அடிப்படையில் உருவ வணக்கத்தையும் அவ்வழிபாட்டையும் வெறுத்தவர். ஆனால், அவரது தந்தை 'ஆசறு' உருவச்சிலைகள் செய்து விற்பவர் ஆவார். ஒரு நாள் தந்தை தன் மகனைச் சிலைகளை விற்றுவர அனுப்பினார். இபுறாகீம் 'உங்களுக்கு எவ்விதப் பயனோ இழப்போ தரமுடியாத இந்தச் சிலைகளை வாங்குவாருண்டா' எனக் கூறிச் சென்றார். மற்றொரு நாள் நகரிலுள்ளோர் அனைவரும் ஒரு விழாவைக் கொண்டாட நகருக்கு வெளியில் சென்றுவிட்டனர். கோயிற் பூசாரிகளும் களியாட்டம் காணச் சென்றுவிட்டனர். விழாவில் கலந்து கொள்ளாது ஊரிலேயே தங்கியிருந்த இபுறாகீம் கோயிலினுள் சென்றார். அங்கு நடுவே பல்வகை மணிகளாலான பெரிய சிலையும், சுற்றிலும் இரும்பு, பித்தளை, கல் முதலியனவற்றிலான சிறுசிறு சிலைகளும் இருந்தன. இபுறாகீம் கோடாரியினால் கற்சிலைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து, அக்கோடாரியைப் பெரிய சிலையில் மாட்டி வைத்துவிட்டு வெளியேறினார். திரும்பி வந்து பார்த்த அந்நகரத்து மக்கள் இபுறாகீம்தான்

இதனைச் செய்திருப்பார் என அவரைக் கேட்க, அவரோ 'எனக்கொன்றும் தெரியாது' நிற்கும் பெரிய சிலையைக் கேளுங்கள். அது சொல்லும் என்றார். 'இது பேசாது என்று தெரிந்தும் நீ எங்களைக் கேலி செய்யலாமா' என்றனர். இபுறாகீமோ, 'உங்களுக்கு யாதொரு நன்மையோ தீமையோ செய்ய ஆற்றலற்ற இவற்றை ஏன் வணங்குகிறீர்' என்றார்.

இதுகேட்ட நமுறூது மன்னன் இப்றாகீமை நெருப்பில் எரியக் கட்டளையிட்டான். தீமூட்டி இபுறாகீமை ஓர் இயந்திரத்தில் பிணைத்து நெருப்பினுள் தள்ளினார்கள். 'வெந்தழலே இபுறாகீமுக்கு இதமளிக்கும் வண்ணம் நீ குளிர்ந்துவிடு' என இறைக்கட்டளை பிறந்தது. (திருக்குர்ஆன்.21:69) செந்தழல் அவருக்கோ தாமரை பூத்த குளநீராகக் குளிர்ந்தது. நமுறூது மன்னன் இப்றாகீமை நாடு கடத்தினான். அவருக்கு இஸ்மாயில் என்றொரு குழந்தை இருந்தபோது இப்றாகீம் தம் குடும்பத்துடன் மக்காவில் குடியேறினார் (Manavai Musthapa, 1987)."

தமிழ் பக்தி மார்க்கத்திலும், காப்பியம் மற்றும் புராணங்களிலும் சாதாரண மனிதர்களாக அவதரித்து தமக்குள் இருக்கும் தெய்வீகத் தன்மையை தக்கதருணத்தில் வெளிப்படுத்திய இறையடியார்கள் பலருண்டு. குறிப்பாக, திருநாவுக்கரசர் சமணத்தை விட்டு சைவத்திற்குச் சென்றதைத் தண்டிக்க பல்லவமன்னன் சுண்ணாம்புக் காளவாயில் அடைத்து துன்புறுத்த முயன்றான். அங்கு சிவபெருமானின் திருப்பாதங்களை நிழலாக நினைத்த திருநாவுக்கரசருக்கு சுண்ணாம்பின் வெப்பம் ஒன்றும் செய்யாமல், இனிமையான வீணை இசையும், மாலை நிலாவும், வீசும் தென்றலும், குளிர்ச்சியான பொய்கையும் போன்று இதமாக இருந்தது என்று தன்னுணர்ச்சியை திகட்டாத செந்தமிழில் பாடியுள்ளார். அப்பாடலானது,

"மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நிழலே"

என்பதாகும் (Nadarajan, 2018). இறுதி முயற்சியாக கல்லோடு கட்டி கடலில் எறிய முயற்சித்த போது,

"கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்

நற்றுணையாவது நம சிவாயவே"

என்று 'ஐந்தெழுத்தாகிய நமசிவாய' என்று சிவபெருமானைத் துதித்துப் பாடினார் (Nadarajan, 2018). மணிமேகலை என்ற தமிழ்ப் பௌத்த காப்பியத்தில் மனையறம் காக்கும் மங்கல மங்கை ஆதிரையின் கணவன் சாதுவன் கடல்வழிப் பொருள் தேடச்சென்று கடும்புயலில் சிக்கி கடலில் இறந்தான் என வந்தோர் கூற்றைக் கேட்டு பத்தினிப் பெண்களுக்கு உள்ள பழமரபுப்படி நெருப்புக்குழி ஒன்றை ஏற்படுத்தி பெற்றோர் உற்றோர் மறுத்தும் அதனுள் இறங்கத் துணிந்தாள். அத்தீயின் வெப்பம் அவளை ஒன்றும் செய்யவில்லை. மேனியழகும் அலங்காரமும் சிறிதும் சிதையவில்லை. மாறாக, நக்கசாரணர் வசிக்கும் நாகர்மலையில் உன் கணவன் இன்னும் உயிரோடுதான் இருக்கிறான். சந்திரதத்தன் என்ற வாணிகனுடன் விரைவில் கப்பலில் வந்து உன்னையடைவான் என்றொரு அசரீரியின் குரல் கேட்டது. ஆதிரையும் தன் கணவன் குறித்த இறைக்கட்டளைச் செய்தியறிந்து உயிரை மாய்க்கும் முடிவைத் துறந்தாள் என்று மணிமேகலைக் குறிப்பிடுகிறது.

ஆக, இஸ்லாம் மார்க்கத்தில் சொல்லப்படுவதைப் போல், சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம் போன்ற உலகப் பெருஞ்சமயங்களில் இறையருள் பெற்றவர்கள் நிகழ்த்திய அல்லது இறையடியார்களுக்காக இறைவனே நிகழ்த்திய அற்புதங்கள் பலவுண்டு. அவையெல்லாம், மக்கள் நலனுக்காக மானுட உயிர்களுக்காக ஒரு ஓர்மைத் தன்மையுடன் அமைந்து சிறக்கின்றன என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை.

## திருமணிமாலை

நமுறூது மன்னனால் நாடுகடத்தப்பட்ட இப்றாகீம், மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்தான். அப்போது, அவனது மகன் இஸ்மாயிலுக்கு பன்னிரெண்டு வயதிருக்கும் போது, அவனைப் பலியிடுமாறு இறைவன் இப்றாகீம் கனவில் அறிவித்தான். இப்றாகீம் கத்தியும் கயிறும் எடுத்துக் கொண்டு மகனைப் பலியிட அழைத்துச் சென்றார். வழியில் மகனிடம் அவரைப் பலியிடவிருப்பதைச் சொன்னார். மகனோ 'தந்தையே அல்ஹாவின் கட்டளைப்படி செய்யுங்கள்' என்றார். அறுக்க வாய்ப்பாயிருக்கும் பொருட்டுக் கயிற்றால் பிணிக்குமாறும் அறுக்கும் போது மனம் மாறிவிடாதிருப்பதற்காகத் தம்மைக் குப்புறப்போட்டு அறுக்குமாறும் இஸ்மாயில் கூறினார். பிறகோ அறுப்பதைத் தான் காணவேண்டும் என்பதால் கயிற்றை அவிழ்க்குமாறும் கத்தியைக் கழுத்தில் அழுத்துமாறும் கேட்டுக் கொண்டார். இப்றாகீமும் அவ்வாறே கத்தியை வைத்து அழுத்தினார் கத்தி மழுங்கியதே தவிரக் கழுத்து அறுபடவில்லை.

தந்தை வெட்ட இருப்பதைச் சொன்ன போது இஸ்மாயில் தந்தை சொல் போற்றுவதே கடன் என இசைகிறார் என்பதை,

“ஆக்கம் நீங்கினும் அகவின்பம் நீங்கினும் ஆக்கம்

ஊக்கம் நீங்கினும் உறுமுறை நீங்கினும் உயிரின்

வீக்கம் நீங்கினும் நீங்கும் நீங்கும் நண்புடன் வியந்தளித்த

தேக்கம் நீங்கிலாது எந்தைசொல் போற்றுதல் சிறப்பே”

எனத் 'திருமணிமாலை' செய்யுள் கூறுகிறது (Muhammed Ali, 2002). ஆக, 'இசுலாத்தில் தெய்வீக அம்சம்' என்பது அறவாழ்வின் அடித்தளமாக உள்ளது. இதனை இறையச்சம் என்று இசுலாம் கூறுகிறது. இறையச்சத்தை மனத்தில் கொண்டு ஒரு மனிதன் செயல்படும்போது அறம்பிறாழதவனாக இருப்பான். மனிதனின் செயல்கள் இறை உவப்பு என்ற அடிப்படையில் அமைதல் வேண்டும். உலக வாழ்வில் நன்மை தீமைகளைப் பொறுத்து மனிதனின் செயல்கள் அமையுமானால் அதுவே அறநெறி என்று இசுலாம் சமயம் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவேதான், இப்றாகீம் இறையச்சம் கொண்டு இறைவனின் கட்டளையை நிறைவேற்றும் விதமாக தனது மகன் என்றும் பாராமல் உயிர்வதை செய்யத் துணிந்துள்ளார். இப்றாகீமின் மேம்பட்ட இறையுணர்வைக் கண்டு இறைவனே அச்செயலையும் நிகழவிடாமல் தடுத்தாட் கொண்டுள்ளார் எனக் கருதமுடிகிறது.

மேற்கண்ட கருத்தொற்றுமையை சோழ நாட்டில் அவதரித்த பரஞ்சோதியார் என்னும் இயற்பெயர் கொண்ட சிறுதொண்டநாயனார் கதையிலும் காணமுடிகிறது. சிவனடியார்களுக்கு தொண்டு செய்வதில் நிகரற்றவராக விளங்கியவர் சிறுதொண்டநாயனார். படைத்தலைவனாக இருந்து பன்னெடும் போர்த்தொழிலை செய்துவந்த பரஞ்சோதியார், மன்னரின் சொல்லுக்கு இணங்கி போர்த்தொழிலைக் கைவிட்டு இல்லறத்தை இனிதே நடத்தத் தொடங்கினார். அடியவர்களுக்கு அமுதளித்து அவர்கள் உண்ட பின்புதான் தாம் உண்ணுவதையே வழக்கமாகக் கொண்டு வாழ்ந்தார். அதனாலேயே அவர் சிறுதொண்டர் எனப் பெயரும் பெற்றார். இனிய இல்லறத்தின் பயனாக அவருக்கு ஒரு ஆண் மகனும் பிறந்திருந்தான். அக்குழந்தைக்கு 'சீராளன்' என்னும் திருநாமமிட்டு வளர்த்து வந்தார்கள்.

இவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுதொண்டரது அன்பையும், பக்தியையும் அவரது தொண்டின் சிறப்பையும் உலகத்தார்க்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான், பைரவ அடியார் வேடந்தாங்கி கருஞ்சட்டை அணிந்து இடக்கையில் சூலம் ஏந்தி சிறுதொண்டர் இல்லத்தினுள் எழுந்தருளி ஐந்து வயது மிகாமல் அங்கத்தில் ஊனம் எதுவும் இல்லாமல் ஒற்றைக்கு ஒரே பிள்ளையாக தாயார் பிடிக்க தந்தை அரிந்து எந்த பிழையுமின்றி சமைத்த பிள்ளைக் கரியினை மட்டுமே நாம் உண்போம் எனக் கூறினார். பைரவரை பணிந்து தம் நங்கையாருடன் அடியார் விரும்பும் அமுதினை படைக்க தம் ஒரே பிள்ளையை பாடசாலையிலிருந்து அழைத்துவந்து நீராட்டி தலை வாரி தமது மனைவி கண்கலங்கிக் கொடுக்க அடியார்க்கு அமுதாகும் பிள்ளையை தாம் முத்தம் கொடுக்கலாகாது என்று அரிவதற்கு தயாரானார். யாரும் பார்த்திடக்கூடாத வண்ணம், கோடிப் பொன் கொட்டி கொடுத்தாலும் கிடைக்காத தம் செல்வத்தை வாரி அனைத்து மார்பில் தாலாட்டிய தம்

மைந்தனை, திருவெண்காட்டு நங்கையார் இரண்டு கால்களையும் இறுகப்பிடித்துக் கொண்டார். இதைக்கண்ட சீராளன் தாம் அடியார்க்கு அமுதாவதை எண்ணி மகிழ்வது போல புன்னகை சிந்தினான். பரமனுக்காக எதையும் செய்வோம் என்று கொள்கையுடைய பெரும் தொண்டுகள் புரியும் சிறுதொண்டர் தம் குமாரனின் தலையினை அரிந்து கறி சமைத்து தன் கணவருக்கு தெரிவித்தார். ஆத்திமர நிழலில் அமர்ந்திருந்த அம்மையப்பனை வணங்கி, கால தாமதம் ஆனதற்கு அடியேனை மன்னிக்க வேண்டும் சுவாமி எனச்சொல்லிய வண்ணம் அடியேன் இல்லத்தில் திருவமுது செய்விக்க தாங்கள் எழுந்தருள வேண்டும் என அழைத்தார்.

பைரவ கோலம் கொண்ட பெருமானின் பாதங்களை தூய நீரினால் கழுவிய சிறுதொண்டர், சுவாமிக்கு தூபங்காட்டி மனையாளுடன் அடியாரை வணங்கினார். யாம் கூறியது போல எல்லா பாகங்களும் சமைத்து வந்து விட்டனவா என்று கேட்கவும் நங்கையார் தலைக்கறி அடியாருக்கு ஆகாது என்று எண்ணி அதை தவிர்த்து விட்டோம் என்றார், யாம் அதையும் விரும்பி உண்போம் என்று பைரவப்பெருமான் கூறியதைக் கேட்ட தொண்டரும் அவர்தம் மனையாளும் செய்வதறியாது திகைத்து நிற்கும் போது சந்தனத்தாதியார், சுவாமிகள் கேட்டால் என்ன செய்வது என்று அடியேன் தலைக்கறியையும் சமைத்து விட்டேன் அம்மா என்று தலைக்கறியையும் எடுத்து வந்தார். எங்கே திருவமுது செய்வதில் பழுது ஏற்படுமோ என்று கலங்கிய தொண்டரது மனம் மலர்ந்தது. திருவெண்காட்டு நங்கையார் முக மலர்ச்சியோடு தலைக்கறியையும் அடியாருக்கு படைத்தார். அதன் பின் பைரவ கோல பெருமான், யாம் தனித்து உண்ண மாட்டோம் சிவனடியார் யாராவது இருந்தால் அழைத்து வாரும் என்றார், இது கேட்ட தொண்டர் வெளியில் சென்று தேடி, யாருமில்லை என முகத்தில் வாட்டம் கொண்டு, அடியாரிடத்தில் வந்து சொன்னார். அதுகேட்ட பைரவர் உம்மை விட இன்னும் ஒரு அடியவர் உண்டா, நீர் நம்முடன் உணவருந்தும் என்று சிறுதொண்டரையும் உணவருந்த பணித்தார்.

யாம் ஆறு மதத்திற்கு ஒருமுறை தான் உண்போம். யாம் உண்பதற்கு முன் பொறுமையில்லாது தாங்கள் உணவருந்துவது தகுமோ என்றார். நம்முடன் உணவருந்த உமது மைந்தனையும் அழைத்து வாரும் என்றார். அவன் வந்த பின் யாம் அமுது செய்வோம் எனறார். அது கேட்டு அடியார்க்கு அமுது படுமோ என்று கலங்கி சுவாமி மைந்தன் இப்போது நமக்கு உதவான் என்றார். அவனை அழையும் அவன் வந்த பின் உணவருந்தலாம், அப்படி இல்லையென்றால் நாம் அமுது செய்வது இல்லை என்று மறுத்தார். பெருமானார் சொல்லைக் கேட்டு சிறுதொன்டரும் அவர் மனையாளும் வீட்டின் தலை வாயிலில் நின்று சீராளா, சீராளா சிவனடியார் உணவுண்ண அழைக்கிறார் வா மகனே என்று அழைத்தனர். என்னவொரு வியப்பு! பரமன் அருளால் பாடசாலையிலிருந்து துள்ளிக் குதித்து ஓடி வந்தான் சீராளன். தம் புதல்வனை வாரிக் கையிலெடுத்து சிவனடியார் அமுதுன்னப் பெரும்பேறு பெற்றோம் என அகமகிழ்ந்தார்.

புதல்வனை அழைத்துக் கொண்டு அமுது செய்வதற்கு வீட்டுக்குள் சென்ற சிறுத்தொண்டர் அங்கே பைரவ அடியாரைக் காணாது மனம் வெதும்பி அய்யோ அடியார்க்கு அமுது செய்விக்க முடியாது போனேனே என்று கலங்கினார். பின் சமைத்த கறியையும் காணாது திகைத்தார், சுவாமியை தேடும் பொருட்டு வெளியில் வந்து பார்த்தார். அங்கே ஆயிரம் சூரியன் ஒளியை மிஞ்சும் வண்ணம் செஞ்சடை சூடிய பெருமான் அம்மையொடு விடை மீது காட்சி கொடுத்தார். சிறு தொண்டரது தொண்டை, அன்பை உலகத்தார் அறியும் வண்ணம் இந்த செயலை நிகழ்த்திகாட்டினார். பசியால் வாடும் கன்று தாய்ப் பசுவைக் கண்டது போல உள்ளம் உவகை பொங்க தம் குடும்பத்தோடு தரையில் வீழ்ந்தார். சிவபெருமானும் உமது தொண்டின் திறம் கண்டு யாம் மகிழ்ந்தோம் என்று தம்மை வணங்கி நின்ற நால்வரையும் திருக்கயிலையில் தம் பதத்தில் என்றும் நிலைத்திருக்க திருவருள் புரிந்தார். ‘இறைவரோ தெண்டருள் ஒடுக்கம் தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே’ என்பது போல் சிவத்தை அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் சிறுதொண்டரின் பெருமையை உணரவேண்டும் என்பதனை சிறுதொண்டர் நாயனார் புராணத்தின் வழி தமிழ் பக்தி மரபில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

இதுபோன்று உலக இலக்கியங்களுக்குள்ளும் சமயங்களுக்குள்ளும் ஒன்றோடொன்று ஏற்படுத்திக்காட்டும் ஒற்றுமை என்பது அவை இலக்கியப் பொதுமைகள் அல்லது சமயப் பொதுமைகள் என்ற கொள்கைகளுக்கு வலுவூட்டுவனாக அமையும் எனலாம். இவ்வாறு ஒற்றுமை காணும் போது இலக்கியங்களுக்குள் வேறுபாடுகள் இல்லை என்று சொல்லிவிட முடியாது. மனிதவாழ்வின் வரலாற்றில் அடிப்படைக் கூறுகளில் உள்ள ஒற்றுமை, இலக்கியங்களின் சூழ்நிலைகளைக் கொண்டே அறியமுடிகிறது. அவற்றை உணர்ந்தால் ஒன்று மற்றொன்றை விளங்கவைக்கும். அவ்வாறு நம்மையும் நம் சூழ்நிலையையும் பழக்கப்படுத்துவதால் பழைய மரபில் புதுப்பொருளை நம்மால் உணரமுடியும். எப்போதும் புதிய படைப்புகளுக்கு பழமை வெளிச்சம் தரும். அந்தப் பழமை - புதுமை பிணைப்புகளுக்கு கிடைத்திருக்கும் ஆயுதம் என்றே சொல்லலாம். வெறும் கனவில் தோன்றிய இறைவனின் கட்டளையை எவ்வித ஐயமுமின்றி செயலில் செய்து முடிக்கும் போது இணையற்ற தம் இறைவனின் பரிபூரண அருள்கிட்டும் என்ற நம்பகத்தன்மை சைவ வைணவத்திலும், சமண பௌத்தத்திலும், இஸ்லாம் கிருத்துவத்திலும் நிச்சயம் இடம்பெற்றிருக்கிறது என்பது தெளிவு. இவை சமயங்களுக்குள் இடம்பெற்றுள்ள பொது நீதியையும், பல்சமய ஒற்றுமைக் கூறுகளையும் எடுத்துரைப்பதாக அமைகிறது எனலாம்.

## References


Mahamathi Sathavathani, (2014) Seerapuranam, Universal Pathippagam, Chennai, India.

Manavai Musthapa, (1987) Samana Pavutha Chirsthwa Ishlamiya Ilakkiyangal, Meerna Pathippagam, Chennai, India.

Muhammed Ali, S.M. (2002) Thiththikum Thirumani, Universal Pathippagam, Chennai, India.

Nadarajan, (2018) Devaram, Uma Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License